நகராட்சிக்குக் கூட அப்படிப்பட்ட உத்திரவு வந்திருக்கிறது. ஆகவே, அதை மறுபரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக் குறிப்பு இல்லை, தெரிந்து சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள் 414-ம் 415-ம் அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

கள்ளக்குறிச்சி—சென்னை விரைவுப் பேருந்துப்பணி.

*வினு திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னுற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி—சென்னைக்கு சங்கராபுரம், திருக்கோயிலூர், விழுப்புரம் வழியாகத் துரிதகால வண்டி விடும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்ருல், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, குறுகிய தூரத்தை உடைய திருவண்ணமலை, பாண்டிச்சேரிக்கு எல்லாம் துரித வண்டிகள் விடப்பட்டிருக்கின்றன. ஆனல் 250 கிலோ மீட்டர்கள் தூரமுள்ள கள்ளக்குறிச்சிக்கு—அங்கே கூட்டுறவு சர்க்கரை ஆலை இருக்கிறது, செப்புத் தொழிற்சாலை இருக்கிறது, வியாபாரிகள் அதிகமாக சென்னைக்கு வந்துபோ போகிருர்கள், பொதுமக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையான இதை எற்றுக்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி ஒரு முனிசிபாலிட்டியாகக் கூட இல்லை. அது பேரூராட்சியாக மட்டுமே இருக்கிறது. அடிக்கடி கள்ளக்குறிச்சி வழியாக சென்னையிலிருந்தும், சென்னையு

1978 மார்ச் 6]

நோக்கியும் 12 விரைவு வண்டிகள் செல்கின்றன. கள்ளக்குறிச்சியிலிருந்து 38 மைல் தூரத்திலுள்ள உளுந்தூர்பேட்டை வழியாக அண்ணா போக்குவரத்துக் கழக, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக மற்ற மாவட்டப் பேருந்துகள் செல்கின்றன. எனவே விரைவுப் பேருந்து கள்ளக்குறிச்சி வரை விடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி வழியாக எத்தனை பேருந்துகள் வந்தாலும் அங்கே பயணிகளுக்கு இடம் கிடைப்பதில்லை. ஆகவே, தற்சமயம் அதிகாலை 4 மணியிலிருந்து திண்டிவனம் வரையிலும் வரும் பேருந்தை சென்னை வரை நீட்டிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் 12 வண்டிகள் வருவதாகச் சொன்னார்கள், அது உண்மையல்ல. 4 வண்டிகள்தான், இரவு 10½ மணிக்கும், 11½ மணிக்கும், 12½ மணிக்கும் என்று வருகின்றன. இரவு நேரத்தில் எனக்கேகூட டிக்கெட் கிடைக்காமல் இரண்டாவது வண்டியில்தான் வந்தேன். தினம் நூறு பேர்களுக்குமேல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். உளுந்தூர்பேட்டையில் லேட்னிங் வண்டிகள்மட்டும்தான் நிற்கின்றன, மற்ற வண்டிகளில் இடம் கிடைப்பதில்லை. ஆகவே, இதைப் பரிசீலனை செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள்தான் தவறான தகவலைக் கூறுகிறார்கள். நான்கு வழித்தடங்கள் எங்கள் உள்ளன, ஆனால் பேருந்துகள் ஓடுவது, சென்னை—சேலம் நோக்கி இரண்டு பேருந்துகளும், சென்னை—கோவை நோக்கி ஒரு பேருந்தும், சென்னை—கோவை நோக்கி இரண்டு பேருந்துகளும், சென்னை—சேலம் ஒரு பேருந்தும் ஆக ஆறு பேருந்துகள் சென்னையிலிருந்து

செல்கின்றன, சென்னை நோக்கி ஆறு பேருந்துகள் வருகின்றன. ஆகமொத்தம் 12 பேருந்துகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகம்.

* வினா 417 திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் மதுரை மாவட்டத்தில் எத்தனை பஸ்கள் ஓடுகின்றன? அதன்மூலம் தினசரி வருமானம் எவ்வளவு?

(ஆ) மதுரை மாவட்டத்தில் ஓடும் பேருந்துகள் இதுவரை ஓடியிருக்கும் சராசரி வருடங்கள் எவ்வளவு?

(இ) 1974-75, 1975-76-ல் எத்தனை பஸ்கள் பயனற்றதாக ஒதுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மதுரை மாவட்டத்தில் 476 பேருந்துகளை ஓட்டியது. அதன்மூலம் கிடைக்கும் சராசரி வருமானம் சுமார் ரூ. 2,79,000.

(ஆ) மதுரை மாவட்டத்தில் ஓடும் பேருந்துகள் இதுவரை சராசரியாக 5 வருடங்கள் ஓடியிருக்கின்றன.

(இ) 1974-75-ல் 29 பேருந்துகளும், 1975-76-ல் 18 பேருந்துகளும் பயனற்றதாக ஒதுக்கப்பட்டன.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, டி. வி. எஸ். கம்பெனியிலிருந்து இந்த பஸ்களை அரசு தேசியமயமாக்கி எடுத்துக்கொண்ட நேரத்தில் எத்தனை வண்டிகள் பயனற்றவையாக இருந்தன, அந்தப் பயனற்ற வண்டிகளுக்கு அரசு பணம் கொடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, பயனற்ற வண்டிகளை எடுத்துக்கொள்வதில் பயனேதும் இல்லாத காரணத்தால் அப்படிப்பட்ட வண்டிகள் ஏதும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS